[12th March 1959

(ஆ) எந்தெந்த இடங்களிலே ஹாஸ்டல் கட்டிடங்கள் கட்ட இத் தொகை செலவழிக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 6·6 lakhs has been allotted for the year 1958–59.

(*b*) Government have sanctioned the construction of Government hostels in Madras, South Arcot, and Tanjore during 1958–59.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் கட்டவேண்டுமென்று நான் கூறியிருந்தேன், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN: திருநெல்வேலி ஜில்லாவில் மட்டுமல்ல எல்லா ஜில்லாக்களிலும் ஜில்லாதோறும் இரண்டு ஹாஸ்டல்கள் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. ஜில்லாத் தலை நகரில் ஒன்றும், ஜில்லாவின் இதர பாகங்களில் முக்கியமான இடத்தில் ஒன்றும் திறக்கப்படும். இதுபற்றி ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்களை ரிபோர்ட் கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து ரிபோர்ட் வந்த பிற்பாடுதான் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : 1958–59-ல் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எந்த எந்த ஹாஸ்டல்கள் கட்டப்பட தீர்மானிக்கப்பட்டன? இப்பொழுது எந்த எந்த ஹாஸ்டல்கள் கட்டப்பட்டுவருகின்றன. ?

THE HON. SRI P. KAKKAN: சென்னை நகரத்திலே எம்.ஸி. ராஜா ஹாஸ்டலுக்கு 1,94,000 ரூபாயில் கட்டுவதற்காக முடிவு எடுக்கப்பட்டது. அந்த இடமெல்லாம் இப்பொழுது வாங்குவதற்கு ஏற்பாடு செய்து, எஸ்டிமேட், ப்ளான் வந்துவிட்டது. அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிற்பாடு வேலை ஆரம்பிக்கப்படும். அடுத்தப்படியாக, தென்னாற்காடு ஜில்லாவில், சிதம்பரத்தில் நந்தனர் ஹாஸ்டல் பெண்களுக்காக கட்டுவதற்கு 3,60,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த வேலை வெகு சீக்கிரம் ஆரம்பிக்கப்படும். சிதம்பரத்திலேயே பையன்களுக்காக ஒரு ஹாஸ்டல் கட்டுவதற்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கே அந்த வேலை ஒரு பகுதி கட்டி முடிந்திருக்கிறது. இன்னொரு பகுதி வேலை நடந்துகொண்டிருக்கிறது. தஞ்சையில் மாணவர்களுக்காக ஹாஸ்டல் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்பட்டது. அந்த வேலை நடந்து பூர்த்தியாகும் கட்டத்தில் இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் ஹாஸ்டல் திறக்கப்படும். அந்த நான்கு இடங்களில்தான் ஹாஸ்டல் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM: பாளையங்கோட்டையில் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. அவைகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்கள் மூன்று இடங்களில் உள்ள ஹாஸ்டல்களில் வாடகை கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு முதல் இடம் கொடுத்து மூன்று ஹாஸ்டல்களையும் ஒரே இடத்தில் இருக்கும்படி கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN: நான் முன்பே சொன்னேன். நான்கு இடங்களில் கட்டிடம் கட்டுவது ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டு திட்டப்படி பணம் செலவழிக்கப்படுகிறது. இனிமேல் கட்டப்படும் ஹாஸ்டலைத் திருநெல்வேலி நகரத்திலா, பாளையங்கோட்டை நகரத்திலா அல்லது எந்த இடத்தில் கட்டினால் மாணவ, மாணவிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று தெரிந்தால் அங்கே கட்டலாம்.

Administration Reports

* 739 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have examined the possibility of avoiding the avoidable delay in issuing Administration Reports; and

12th March 1959]

(b) whether the Government propose to make available to the Legislature by the time of presentation of the Budget, the Administration Reports of all Departments for the year preceding the financial year in which the Budget Estimates for the succeeding years are presented?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) Every step has been taken to publish the Administration Reports as early as possible after the close of the year to which the reports relate.

SRI K. SATTANATHA KARAYALAR : சமீபத்திலே வந்திருக்கும் ஆட்சி அறிக்கையைப் பார்த்தால் 1955–56 நிதி ஆண்டுவரைதான் எல்லா டிபார்ட்மெண்டுக்கும் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒன்றிரண்டு டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில் 1956–57–க்கும் வந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி அதிகம் கால தாமதம் ஆவது என்? அப்படிக் கால தாமதம் ஆகிற அந்த சில ஆண்டுகளை விட்டுவிட்டு, கடைசியாக உள்ள ஆண்டுக்காவது அறிக்கை தயாரிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது 1956–57 ஆண்டுக்குள்ள அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் தயாராகி வெளியாகி மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1957–58–க்கு இப்பொழுது அதைக் கோர்வையாக எடுத்து அச்சுக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், அதிகக் காலதாமதம் இப்பொழுது இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Veterinary Dispensary at Vedaranyam.

* 740 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் கால்நடை ஆஸ்பத்திரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமாய் எதேனும் வேண்டுகோள் வந்ததா ?

(ஆ) அதன்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : (a) No request relating to the acquisition of land for the Veterinary Dispensary at Vedaranyam has been received. But the Block Development Officer, himself, had taken up the question of adding some more land for the Minor Veterinary Dispensary when it was under the the Community Development administration.

(b) The matter is under correspondence with the Collector.

SRI A. VEDARATHNAM : அங்கே வருகின்ற கால்நடைகள் நிற்பதற்குக் கூட இடம் இல்லாத சிரமமான நிலை ஏற்படுகிறதால், அருகாமையிலுள்ள புறம்போக்கு நிலத்தை அதோடு சேர்க்கவேண்டுமென்ற தீர்மானம் ப்ளாக் டெவலெப்மெண்ட் அட்வைசரி கமிட்டியில் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறதே, அதை உடனடியாக கவனித்து, அது கிடைக்கும்படி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லியது போல் நிலம் வேண்டியிருக்கிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் குறிப்பிட்டதுபோல், ஜில்லா வெடரினரி ஆபீசரும், கலெக்டரும் இதை அக்கவையர் செய்வதற்காக கவனம் செலுத்தி வருகிறார்கள்.